**செம்பாக்கம் நகராட்சியில் 31.8.2020ம் நாள் திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற சாதாரணகூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. கா. ராஜலட்சுமி**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**

பொருள் எண்.1

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் ஆகஸ்டு 2020 மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.678** **பதிவு செய்யப்பட்டது.**

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகள் மற்றும் வாட்ஸ்ஆப் குறுஞ்செய்தியின் அடிப்படையில், செம்பாக்கம் நகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளின் கீழ், நோய் தொற்று கண்ட கட்டுபாட்டு பகுதிகளில் (வீடுகளில்) Containment Zone / Barriguard Houses நோய் தொற்று ஏற்பட்ட நபர்கள் மற்றும் அவரை சார்ந்தவர்களின் நடமாட்டத்தை கட்டுபடுவதற்காகவும், தினசரி 70 கொரோனா மாதிரிகள் எடுத்து அவர்களின் வீடுகளில் தனிமைப்படுத்தவும், தேவைப்படும் அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் செய்யவதற்காகவும் தன்னார்வலர்கள் நியமனம் செய்ய தெரிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், இந்நகராட்சியில் கட்டுபாடு பகுதிகளில் நோய் தொற்றினை கட்டுபடுத்துவதற்கும், அத்தியாவசிய பொருட்களை விநியோகம் செய்யவதற்கும் முப்பது தன்னார்வலர்கள் (30 Volunteers) செய்வது அவசியமாகிறது. இப்பணியினை அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் மாவட்ட ஆட்சித்தலைவர், செங்கற்பட்டு அவர்களின் அறிவுரைகளின் படியும், அரசாணை (நிலை) எண்.112 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நாள் 20.6.2020ல் சென்னை மாநகராட்சிக்கு நிர்ணயம் செய்து வழங்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் ஊக்கத் தொகை இந்நகராட்சி பகுதியில் வழங்கிடவும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கலப்பட்டு மண்டலம் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளின் படியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் இப்பணியினை மேற்கொள்ளலாம்.

மேலும், குறுகிய காலத்தில் உடனடியாக தன்னார்வலர்களை தேர்வு செய்வது, அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட பகுதிகளில் அவர்களின் பணிகளை கண்காணிப்பது மற்றும் அவர்களின் வருகைக்கேற்பவும், பணிதிறன் அடிப்படையில் ஊக்கத் தொகையினை நேரடியாக வங்கி கணக்கில் வழங்குவது, வங்கி கணக்கு இல்லாத தன்னார்வலர்களுக்கு ஊக்கத் தொகையினை நேரடியாக வழங்குவது ஆகிய பணிகளை செயல்படுத்துவது சாத்தியகூறு இல்லாத காரணத்தினால், இப்பணியினை நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் ஒருவர் மூலம் மேற்கொள்ளவும், தேவைக்கேற்ப ஈடுபடுத்திடவும், இதற்கான தோராய செலவின மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு 15ன் கீழ் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.679 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.3

செம்பாக்கம் நகராட்சியில் 21.8.2020 அன்று பெறப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்ட நிதி பணிகளுக்கான இரண்டு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2020-21 | | |
| 1 | சிப்பம் -1<br>செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1, 2, 3, 7, 10 மற்றும் 12 ஆகிய வார்டுகளில் தார் சாலை பணிகள் | 0.90 | 1. திரு. எல். சதீஷ்குமார் |
| | | | 2. திரு. எல். கிஷோர்குமார் |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் முன்னிலையில் தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதிகள் பெற்று தேர்வு செய்யப்பட்டுள்ளன.

தொழில்நுட்ப கூர்ந்தாய்வில் தேர்வு செய்யப்பட்டுள்ள கீழ்கண்ட பணிக்கான விலை ஒப்பந்தப்புள்ளியினை (Price Bid) ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் 24.8.2020ல் திறக்கப்பட்டு கீழ்கண்ட விவரப்படி ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2020-21 | | | |
| 1 | சிப்பம் -1<br>செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1, 2, 3, 7, 10 மற்றும் 12 ஆகிய வார்டுகளில் தார் சாலை பணிகள் | 0.90 | 1. திரு. எல். சதீஷ்குமார் | மதிப்பீட்டை விட 4.90% அதிகம் |
| | | | 2. திரு. எல். கிஷோர்குமார் | மதிப்பீட்டை விட 7.48% அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்களுக்காக பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக சிப்பம் 1–க்கு 4.90% மதிப்பீட்டை விட அதிகமாக திரு. எல். சதீஷ்குமார் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். மதிப்பீட்டை விட ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை அதிகமாக உள்ள காரணத்தினால் ஒப்பந்த தொகையினை குறைத்து தரக்கோரி ஒப்பந்ததாரருக்கு 24.8.2020ல் கடிதம் அனுப்பப்பட்டதை தொடர்ந்து மேற்படி ஒப்பந்ததாரர் மூலம் 27.8.2020ம் தேதிய கடிதத்தில் சாலைப்பணிக்கான பொருட்களின் விலை, பணியாளர்களின் ஊதியம், வாகனங்களின் டீசல் விலை உயர்வு மற்றும் கொரோனா தொற்று நோயினால் பணியாட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாலும் மதிப்பீட்டு தொகையை விட முறையே சிப்பம் 1–க்கு 4.90% மதிப்பீட்டை விட கூடுதல் தொகைக்கு இப்பணியினை செய்ய சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளார். எனவே, மன்றம் பரிசீலத்து முடிவு செய்யலாம்.

2. மதிப்பீட்டிற்கு கூடுதலான தொகையினை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.680 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

செம்பாக்கம் நகராட்சியின் 3வது வார்டு எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள நன்மங்கலம் காப்புக் காட்டில் இன்கா கேபிள் நிறுவனம் மூலம் பயன்படுத்திய சாலையினை பொது பயன்பாட்டிற்கு வனத்துறை மூலம் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒப்பந்த விதிகளின் படி இந்நகராட்சி மூலம் நில குத்தகை தொகையாக ஆண்டிற்கு ரூ.2500/- வீதம் செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் வனத்துறைக்கு ஆண்டு தோறும் நில குத்தகை தொகை ரூ.2500/- வீதம் இந்நகராட்சி மூலம் கடந்த 3.3.2016 முடிய உள்ள காலத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. மாவட்ட வன அலுவலர், காஞ்சிபுரம் அவர்களின் 5.8.2020ம் தேதிய கடிதத்தில் 4.3.2016 முதல் 3.3.2020 வரையான 4 ஆண்டு காலத்திற்கு நில குத்தகை தொகை ரூ.10000/- செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, குத்தகை தொகை ரூ.10000/- ஐ மாவட்ட வன அலுவலருக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.681 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.10568/2019/இ1 நாள் 21.2.2020 செயல்முறை அவர்களின் உத்திரவில் மூலதன மான்ய நிதி திட்டம் 2019–20ன் கீழ் ரூ.135.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது.

மேற்கண்ட பணி அரசு துறை சார்ந்த திட்டமாக உள்ளதால், எரிவாயு தகன மேடை நிறுவ தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியத்தின் அனுமதி (Consent to Establish) வழங்குவதற்கு கட்டணமாக ரூ.28400/–க்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.682** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் இயக்குநரிடமிருந்து 2020-2021ம் ஆண்டிற்கு வருடாந்திர சந்தா தொகை செலுத்த கீழ்காணும் விவரப்படியாக கேட்பு தொகை நிர்ணயம் செய்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு. (இயக்குநர், தமிழ்நாடு நகரியில் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர், கடிதம் ந.க.எண்.276/2020 அ2 நாள் 18.8.2020). அதன் அடிப்படையில் சந்தா தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்காக.

| ஆண்டு | சந்தா தொகை |
|---|---|
| 2020-2021 | ரூ.20000/- |

அலுவலக குறிப்பு: அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை ரூ.20000/– ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.683** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சிக்கு சொந்தமான இன்னோவா வாகனம் எண். TN 11 D 2013ல் காலமுறை பராமரிப்பு பணி மேற்கொள்ள தயாரிப்பு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட லான்சன் மோட்டார்ஸ் பிரைவேட் லிட், பள்ளிக்கரணை நிறுவனத்திடம் வாகனத்தை ஒப்படைத்து பணி செய்து முடிக்கவும், அதற்கான தோரய மதிப்பீட்டு தொகை ரூ.20000/–க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.684** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

செம்பாக்கம் நகராட்சியில் **2020–21**ம் நிதியாண்டு பொது சுகாதார பிரிவில் பொது நிதியின் கீழ் கீழ்காணும் பணியினை மேற்கொள்வதற்காக **28.8.2020** அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | Repairs and Maintenance of Battery Operated Vehicles – 13 Nos at Sembakkam Municipality | 7.10 | CY Group of Company, Chennai - 1 | குறைவு |
| | | | Subha Metal Industrial, Chennai -1 | அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.685** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

தமிழக அரசு மூலம் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் **144** தடை உத்திரவி பிறப்பிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதால், அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் **1920**ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு **15**ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் மற்றும் செலவினத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | பொது சுகாதார பிரிவில் கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக தெர்மல் ஸ்கேனர், பல்ஸ் ஆக்ஸி மீட்டர், பிபிஈ கிட், கையுறைகள் மற்றும் சோப்பு ஆகியவற்றை கொள்முதல் செய்த வகையில் மெஸ்ஸர்ஸ் எஸ்.ஆர். எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு வழங்கியது. | **784125** |
| 2 | பொது சுகாதார பிரிவில் கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக கிருமிநாசினிகளில் | **70000** |

| | | |
|---|---|---|
| | ஒன்றான நீர்த்த சுண்ணாம்பு தூள் 10000கி கொள்முதல் செய்த வகையில் மெஸ்ஸர்ஸ் ஆர்.எஸ்.ஆர். எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு வழங்கியது. | |
| 3 | கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், களப்பணிக்கு தேவையான புள்ளி விவர சேகரிப்பு படிவங்கள், போஸ்டர்கள், பேனர்கள் அச்சிட்டு சப்ளை செய்தமைக்கு ஸ்ரீ கிருஷ்ணா பிரிண்டர்ஸ்க்கு வழங்கியது. | 366300 |
| 4 | நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கொரோணா நோய் தொற்று ஏற்பட்ட குடியிருப்பு கட்டிடங்களிலிருந்து வெளியேறாத வகையில் தடுப்பு வேலி அமைத்தல் பணி மேற்கொண்ட வகையில் ஒப்பந்ததாரர் திரு. எல். கிஷோர்குமார்–க்கு வழங்கியது. (அளவு புத்தகம் எண்.18/20–21) | 112209 |
| 5 | நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கொரோணா நோய் தொற்று ஏற்பட்ட குடியிருப்பு கட்டிடங்களிலிருந்து வெளியேறாத வகையில் தடுப்பு வேலி அமைத்தல் பணி மேற்கொண்ட வகையில் ஒப்பந்ததாரர் திரு. எல். கிஷோர்குமார்–க்கு வழங்கியது. (அளவு புத்தகம் எண்.18எ/20–21) | 88140 |
| 6 | தடை உத்திரவு காலத்தில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் காய்கறிகளை பொது மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு வாடகை அடிப்படையில் வாகனங்கள் அமர்த்தப்பட்டது. வாடகை தொகை 1.5.2020 முதல் 20.5.2020 வரை வாகன உரிமையாளர்களுக்கு வழங்கியது | 141000 |

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.686 செலவினங்கள் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்.10

செம்பாக்கம் நகராட்சி பொது நிதி 2020-21-ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைகும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வேளச்சேரி பிரதான சாலையில் சாலையின் நடுவே அமைக்கப்பட்டுள்ள சென்டர் மீடியன் மின் விளக்குகளுக்கான கேபிள் ராஜகீழ்பாக்கம் சிக்னல் முதல் கௌரிவாக்கம் நகராட்சி எல்லை முடிவு வரை பழுதடைந்தள்ளதை மாற்றி புதியதாக அமைத்தல் பணி | 9.90 |

**அலுவலக குறிப்பு :–**

1. தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.687 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை விதி 2016ன் படி மக்கும் குப்பைகளை நகராட்சி பகுதிக்குள்ளேயே இறுதியாக்கம் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதைப்போல் மக்காத மறு சுழற்சி குப்பைகளான பிளாஸ்டிக் குப்பைகளை வாரம் ஒரு நாள் உள்ளூர் வியாபாரிகளிடம் விற்பனை செய்தது போக மீதமுள்ள விற்காத மறு உபயோகக் கழிவு பிளாஸ்டிக்குகளை எரியூட்ட கூடிய பிளாஸ்டிக் கழிவுகள், பேப்பர், பாட்டில்கள், பழைய துணிகள், டயர்கள் கொண்ட உலர் கழிவுகளை அரியலூர் அல்ட்ரா டெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு வந்தது. ஒரு முறை அரியலூர் சென்று வர தனியார் வாகனம் ஒன்றுக்கு தோராய வாடகை தொகையாக ரூ.20000/- செலவினமும், அதில் 7 முதல் 10 டன் வரை அதிகபட்சமாக ஏற்றி அனுப்பிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. சில நாட்கள் மேற்படி சிமெண்ட் நிறுவனத்தால் வாங்க இயலாத நாட்களில் வேங்கடமங்கலம் கூட்டு திடக்கழிவு மேலாண்மை வளாகத்தில் கொண்டு சேர்த்து வரப்படுகிறது.

மேலும், பசுமை தீர்ப்பாய நாள்.16.12.2019 தேதிய நீதிமன்ற உத்திரவின் படி ஏற்கனவே உள்ள குப்பைகளை Bio-Mining மூலம் அப்புறப்படுத்திடவும், நாள்தோறும் சேகரிக்கப்படும் Dry Waste குப்பைகளை அதற்குரிய வழி வகையினை ஏற்படுத்தி, வேங்கடமங்கலம் உரக்கிடங்கினை பயன்படுத்திக்கொள்ளவும், அதுவரை அவ்விடத்தில் மேற்கொண்டு குப்பைகள் கொட்டுவதை தவிர்க்கவும், சட்ட விதிகளின் படி முறையான நடவடிக்கைகள் மேற்கொண்டு தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ள பசுமை தீர்ப்பாயத்தால் உத்திரவிடப்பட்டுள்ளது.

பசுமை தீர்பாய நீதிபதி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 18.12.2019ம் தேதியன்று வேங்கடமங்கலம் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை இடத்தினை ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வில் உடனடியாக இவ்விடத்தில் ஏற்கனவே உள்ள குப்பைகளை Bio-Mining Process மூலம் பிரித்து அப்புறப்படுத்தவும், RDF கழிவுகளை Incineration மூலம் எரிக்கவும், நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்திரவிடப்பட்டது. அதன் அடிப்படையில் ஏற்கனவே உள்ள குப்பைகளை Bio-Mining Process மூலம் பிரித்து அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தினசரி 100 மெட்ரிக் டன் அளவில் RDF கழிவுகளை Incineration மூலம் எரிக்க ரூ.10.00 கோடியில் திட்ட வரைவு தயார் செய்யப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 28.1.2020 முதல் வேங்கடமங்கலத்தில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களை சரி செய்து இயக்கவும், Dry Waste குப்பைகளை முழுமையாக பிரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

Dry Waste (மக்காத உலர் கழிவுகள்) வேறெங்கும் கொட்ட இயலாத நிலை உள்ளதால், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பெருங்குடி குப்பைக்கிடங்கில் தற்காலிகமாக (28.1.2020 முதல் 19.08.2020 வரை) இந்நகராட்சியில் உருவாகும் மக்காத உலர் கழிவுகளை கொண்டு சேர்க்க அனுமதி பெற்று அதன் படி கொண்டு சேர்த்து வரப்பெற்றது. இந்நிலையில் சென்னை பெருநகர மாநகராட்சி நிர்வாகம் தனது 6.8.2020ம் தேதியிய கடிதம்

மூலம் பெருங்குடி குப்பை கிடங்கில் இந்நகராட்சியின் உலர் கழிவுகளை கொண்டு சேர்ப்பதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இந்நகராட்சியில் நாள்தோறும் உருவாகும் 10 முதல் 12 டன் வரை உலர் கழிவுகளை வேறு எங்கும் எடுத்து சென்று சேர்ப்பதற்கு வழிவகை இல்லாததால் பொது சுகாதார நலன் கருதி மற்றும் கொரோனா பெருந்தொற்று காலத்தில் குப்பைகளை தேங்க விடாமல் தொற்று நோய் பரவுவதை தடுக்கும் விதமாகவும், ஒரு முறை 7 முதல் 10 மெட்ரிக் டன் உலர் கழிவுகளை கொண்டு செல்வதற்கு ரூ.14000/– வீதம் (டிப்பர் லாரி வாடகை, டிரைவர் பேட்டா, டீசல், ஆயில், ஏற்றுக்கூலி மற்றும் இதர செலவினங்கள் உட்பட) கணக்கீடு செய்து, அவசர அவசியம் கருதி உள்ளூர் வாகன உரிமையாளர்களிடமிருந்து தேவைக்கேற்ப அவ்வப்பொழுது விலைப்புள்ளிகள் பெற்று, குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் வாகன உரிமையாளர் மூலம் பணி மேற்கொள்ளவும், இதற்கான தோராய செலவின மதிப்பீடாக ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. இதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. அவசர அவசியம் கருதி உள்ளூர் வாகன உரிமையாளர்களிடமிருந்து தேவைக்கேற்ப அவ்வப்பொழுது விலைப்புள்ளிகள் பெற்று, குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் வாகன உரிமையாளர் மூலம் பணி மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பதிவிற்கு.

**தீர்மான எண்.688** அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி

**பொருள் எண்.2**

தமிழ்நாடு வக்ஃபு வாரிய ஊழியர்கள் குடியிருப்பு பள்ளி வாசலின் 11.7.2020ம் கடிதத்தில் ராஜகீழ்பாக்கம் கிராமம், நில அளவை எண்.39/1ல், வள்ளல் யூசப் நகர் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு வக்ஃப் வாரிய ஊழியர்கள் குடியிருப்பு பள்ளிவாசல் வளாகத்தில் அடக்கஸ்தலம் ஏற்படுத்த அனுமதி கோரியுள்ளனர்.

இது குறித்து தமிழ்நாடு வக்ஃபு வாரிய ஊழியர்கள் குடியிருப்பு பள்ளி வாசல் மூலம் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு மனு அளித்து அது தொடர்பான விசாரணை அறிக்கை சிட்லபாக்கம் வருவாய் ஆய்வாளரிடம் நிலுவையாக உள்ளது என மனுதாரர் மூலம் தெரிவிக்கப்பட்டது. மேலும், இது குறித்து திரு. எ.வி. சிராஜூதின் த/பெ. அப்துல் வகாப் மூலம் தொடரப்பட்ட பார்வை 2ல் காணும் சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண்.6586/2017 தீர்ப்புரை நாள் 17.3.2017ல் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"Though the petitioner prays for a larger relief, this Court in the Light of the facts and circumstances and without going into the merits of the claim projected by the petitioner, directs the first respondent to put the respondents 2 and 3 on notice and thereafter, consider the representations of the petitioner dated 10.11.2016 and 02.01.2017 in accordance with law and pass orders within a period of eight weeks from the date of receipt of a copy of this orders and communicate the decision taken to the petitioner as well as to the respondents 2 and 3."

மேற்காணும் நீதிமன்ற தீர்ப்புரையின் படி அவ்விடத்தில் அடக்கஸ்தலம் ஏற்படுத்துவதற்கான அனுமதி அளிப்பது தொடர்பாக மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலணைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

ராஜகீழ்பாக்கம் கிராமம், நில அளவை எண்.39/1ல், வள்ளல் யூசப் நகர் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு வக்ஃப் வாரிய ஊழியர்கள் குடியிருப்பு பள்ளிவாசல் வளாகத்தில் அடக்கஸ்தலம் ஏற்படுத்த மாவட்ட ஆட்சியர் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியத்தின் தடையின்மை சான்று பெற்ற பின்னர் அனுமதி வழங்க மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண்.679 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**